# ஆரம்பக்கல்வி ஆசிரியர்களின் கற்பித்தல் செயற்றிறனில் செல்வாக்குச் செலுத்தும் ஆசிரியர் சார் காரணிகள்

**C. Christen Vergini[1*] and M. Sathiyakumar[2]**
[1]*Faculty of Graduate Studies, University of Jaffna, Sri Lanka*
[2]*Department of Education, Faculty of Arts, University of Jaffna, Sri Lanka*

**ஆய்வுச்சுருக்கம்**

ஆரம்பக்கல்வி என்பது மாணவர்களின் அடிப்படை அறிவு, திறன் மற்றும் ஆளுமை வளர்ச்சிக்கான முக்கிய கட்டமாகும். இந்நிலையில் ஆசிரியர்களின் கற்பித்தல் செயற்றிறன் மாணவர்களின் கல்வி முன்னேற்றத்தில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்துகின்றது. இவ்வாய்வு, யாழ்ப்பாண கல்வி வலயத்திலுள்ள நல்லூர் கோட்ட வகை II பாடசாலைகளில் பணியாற்றும் ஆரம்பக்கல்வி ஆசிரியர்களின் கற்பித்தல் செயற்றிறனில் செல்வாக்குச் செலுத்தும் ஆசிரியர்சார் காரணிகளை ஆய்வு செய்வதை நோக்கமாகக் கொண்டது. இவ்வாய்வில் விவரண மற்றும் விளக்க ஆய்வு முறைகள் பயன்படுத்தப்பட்டன. குறுக்குவெட்டு கணக்கெடுப்பு ஆய்வு முறை (Cross-sectional Survey Research) பயன்படுத்தப்பட்டு, 65 ஆரம்பக்கல்வி ஆசிரியர்கள் குடித்தொகை மாதிரியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர். தரவுகள் வினாக்கொத்து மூலம் சேகரிக்கப்பட்டு, Spearman Correlation பகுப்பாய்வு மூலம் ஆய்வு செய்யப்பட்டது. ஆய்வின் முடிவுகள் ஆசிரியர்களின் தயார்நிலை, மனப்பாங்கு, வகுப்பறை முகாமைத்துவத் திறன் மற்றும் படைப்பாற்றல் திறன் ஆகியவை கற்பித்தல் செயற்றிறனுடன் குறிப்பிடத்தக்க தொடர்பு கொண்டுள்ளதை வெளிப்படுத்தின. குறிப்பாக வகுப்பறை முகாமைத்துவத் திறன் கற்பித்தல் செயற்றிறனுடன் அதிகமான நேர்மறைத் தொடர்பைக் காட்டியது. மேலும், ஆசிரியர்களின் மனப்பாங்கும் தயார்நிலையும் உயர்ந்த நிலையில் காணப்பட்டாலும், வகுப்பறை முகாமைத்துவம் மற்றும் படைப்பாற்றல் தொடர்பான சில குறைபாடுகள் காணப்பட்டன. இவ்வாய்வு ஆசிரியர்களுக்கான தொடர்ச்சியான தொழில்முறை பயிற்சிகள், வகுப்பறை முகாமைத்துவ மேம்பாட்டு நடவடிக்கைகள், கற்பித்தல் வளங்களின் அதிகரிப்பு மற்றும் ஆசிரியர் ஊக்குவிப்பு திட்டங்கள் ஆகியவற்றை வலுப்படுத்த வேண்டிய அவசியத்தை வலியுறுத்துகிறது. இதன் மூலம் ஆரம்பக்கல்வி ஆசிரியர்களின் கற்பித்தல் செயற்றிறனை மேம்படுத்தி மாணவர்களின் கல்வி அடைவுகளை உயர்த்த முடியும்.

**முதன்மை பதங்கள்:** ஆரம்பக்கல்வி, கற்பித்தல் செயற்றிறன், ஆசிரியர்சார் காரணிகள், தொழில்முறைப்பயிற்சி, ஆசிரியர் தயார்நிலை

## அறிமுகம்

குழந்தையின் மூளை 90% வரை விருத்தியடைவது பத்து வயதிற்குள்ளேயாகும். இக்காலப் பகுதியில் தரமான கல்வி வழங்கப்பட்டால் மாணவர்களிடம் அறிவாற்றல் திறன்கள் சிறப்பாக வளர்க்கப்படும். மொழி, கணித எண்ணக்கருக்கள் ஆரம்பத்திலேயே மாணவர்களுக்கு வழங்கப்படுவதால் சிறந்த அடித்தளமாக ஆரம்பக்கல்வி திகழ்கின்றது. சிறுவயதில் மாணவர்கள் பெறும் comஊக்கங்கள், அன்பு மற்றும் கவனிப்பு என்பன அவர்களிடம் தன்னம்பிக்கையை ஏற்படுத்தும் (Hamre & Allen, 2016). இலங்கை அரசானது தனது பிரஜைகளுக்கு சிறந்த கல்வியினை வழங்குவதன் மூலம் நாட்டின் அபிவிருத்திக்காகவும் தமது வாழ்வியலை சிறந்த முறையில் வாழத்

vergini89@gmail.

தேவையான வாழ்க்கைத்திறன்களை மேம்படுத்துதல் போன்ற நோக்கங்களினை அடைந்து கொள்வதற்கான முதற்படியான பரீட்சையே தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சை ஆகும். இப்பரீட்சையில் 70 புள்ளிகள் பெற்றால் மாணவர்கள் சித்தியடைந்தவர்களாகக் கொள்ளப்படுவர். எனினும், நல்லூர் கோட்டத்தின் வகை II பாடசாலைகளில் 70 புள்ளிகளைப் பெற முடியாத மாணவர்களின் எண்ணிக்கை குறிப்பிடத்தக்க அளவில் காணப்படுவது கவலைக்கிடமானதாகும். Pernando & Karunaratne (2018) தரம் ஒன்று முதல் ஐந்து வரை கல்வி கற்கும் மாணவர்கள் அடிப்படை அறிவு, கணிதத் திறன், மொழித் திறன் போன்ற அடிப்படையான கற்றல் திறன்களைப் பெற வேண்டிய கட்டத்தில் இருக்கின்றனர். இக்கட்டத்தில் உரிய கற்றல் அடைவுகள் பெறப்படாவிட்டால், அது மாணவர்களின் உயர்கல்வி முன்னேற்றத்தையும் எதிர்கால கல்விச் சாதனைகளையும் பாதிக்கும் எனக் கூறியுள்ளார்.

எனவே, தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சை பெறுபேறுகளை மேம்படுத்துவதற்காக ஆரம்பக்கல்வி மட்டத்தில் கற்பித்தல் தரத்தை உயர்த்துதல், ஆசிரியர்களின் தொழில்முறை திறன்களை வலுப்படுத்துதல் மற்றும் போதிய வளங்களைப் பெற்றுக்கொடுத்தல் ஆகியவை இன்றியமையாததாகின்றன. அந்த வகையில் இவ்வாய்வு நல்லூர் கோட்ட வகை II பாடசாலை ஆரம்பக்கல்வி ஆசிரியர்களின் கற்பித்தல் செயற்றிறனில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள் எவை என்பதை ஆராய்வதை நோக்கமாக கொண்டமைந்ததாகும். Navaratnam (2023) நல்லூர் கல்விக் கோட்டத்தில் இடைநிலை ஆசிரியர்கள் ஆரம்பக்கல்வி பணிநிலைத்தன்மை பற்றிய அச்சத்தால் கற்பித்தலில் உற்சாகம் இழக்கின்றனர். தகுதி பெற்ற ஆசிரியர்களின் வழிகாட்டல் இல்லாமையால் மாணவர்களின் கற்றல் முன்னேற்றம் குறைகின்றது எனக் கண்டறிந்துள்ளனர்.

அந்தவகையில் நல்லூர் கோட்ட வகை II பாடசாலைகள் 12 காணப்படுகின்றன. இங்கு கல்வி கற்கின்ற ஆரம்பக்கல்வி மாணவர்களின் மொத்த எண்ணிக்கை 437 ஆகும். இவர்களில் 2025 புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோன்றியோர் 91 மாணவர்கள். இவர்களில் ஏழு மாணவர்கள் வெட்டுப்புள்ளிக்கு மேலும் 46 மாணவர்கள் 70 புள்ளிகளுக்கு மேலும் பெற்றுக் கொண்டனர். 70 புள்ளிகளுக்கு குறைவாக 38 மாணவர்களும் காணப்படுகின்றனர்.

Rajendran (2021) ஆரம்பக்கல்வி ஆசிரியர்களின் மிக முக்கிய பணிகளாக மாணவர்களுக்கு சிறந்த கல்வியை வழங்குவதும் கற்றலோடு இணைந்த செயற்பாடுகளில் மாணவர்களைப் பங்குபற்ற வைப்பதுமாகும் எனக் குறிப்பிட்டுள்ளார். அந்தவகையில் நல்லூர் கோட்ட வகை II மாணவர்கள் கற்றலோடு இணைந்த செயற்பட்டு மகிழ்வோம் மற்றும் பல்வேறு போட்டிகளிலும் ஏனைய கோட்டப் பாடசாலைகளுடன் ஒப்பிடும் போது வகை II பாடசாலை மாணவர்கள் வெற்றிபெறுவதென்பதும் மிகவும் குறைவானதொன்றாகவே இருக்கின்றது என்பதை வலயமட்ட மேற்பார்வைகளின் போதும் தரம் ஐந்து செயலமர்வுகளின் போதும் வலயக்கல்விப் பணிப்பாளர், ஆரம்பக்கல்வி உதவிக்கல்விப் பணிப்பாளர் மற்றும் ஆசிரிய ஆலோசகர்கள் பலமுறை குறிப்பிட்டுள்ளமை அவதானிக்க முடிந்தது.

ஆரம்பக்கல்வி மாணவர்களின் கல்வி மற்றும் இணைபாடவிதான அடைவுகளுக்கு ஆரம்பக்கல்வி ஆசிரியர்களே முக்கிய பொறுப்பாளர்களாக அமைகின்றனர். Darling-Hammond (2000) ஆரம்பக்கல்வி ஆசிரியர்களுக்கான தனிப்பட்ட பயிற்சி இல்லாவிட்டால் மாணவர் செயற்திறன் குறையும். எனவே நல்லூர் கோட்டத்தில் வகை II பாடசாலைகளில் கற்பிக்கும் ஆரம்பக்கல்வி ஆசிரியர்களின் வெற்றிகரமான கற்பித்தலில் செல்வாக்குச் செலுத்தும் ஆசிரியர் சார் காரணிகளை இனங்கண்டு அதன் தாக்கம் எந்த அளவில் இருக்கின்றது என்பது ஆய்வுப் பிரச்சினையாகக் கொள்ளப்பட்டு இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டது.

## ஆய்வு நோக்கமும் குறிக்கோள்களும்

### *ஆய்வு நோக்கம்*

ஆரம்பக்கல்வி ஆசிரியர்களின் கற்பித்தல் செயற்றிறனில் செல்வாக்குச் செலுத்தும் ஆசிரியர் சார் காரணிகளை அடையாளம் கண்டு, அவை கற்பித்தல் செயற்றிறனை எவ்வாறு பாதிக்கின்றன என்பதை ஆராய்வதே ஆய்வின் பிரதான நோக்கமாகும்.

### *ஆய்வுக் குறிக்கோள்கள்*

1. ஆரம்பக்கல்வி ஆசிரியர்களின் கற்பித்தல் செயற்றிறன் நிலையை கண்டறிதல்.
2. ஆசிரியர் சார் காரணிகளை அடையாளம் காணல்.
3. கற்பித்தல் செயற்றிறனில் ஆசிரியர் சார் காரணிகளின் செல்வாக்கினை அறிதல்.

## இலக்கிய மீளாய்வு

### *கோட்பாட்டாளர்கள் முன்வைத்த கருத்துகள்*

Shulman (1987) இல், ஒரு திறமையான ஆசிரியர் “Pedagogical Content Knowledge (PCK)” எனப்படும் கற்பித்தல் சார்ந்த உள்ளடக்க அறிவைப் பெற்றிருக்க வேண்டும். அதாவது, ஆசிரியர் கற்பிக்க வேண்டிய பாடப்பொருளை மட்டுமல்லாமல், அதை எவ்வாறு கற்பிக்கலாம் என்ற முறையும் அறிந்திருக்க வேண்டும். இது வெற்றிகரமான கற்பித்தலுக்கான அடித்தளமாகும். இக்கோட்பாட்டின் மூலம் அவர் ஆரம்பக்கல்வி ஆசிரியர்கள் மாணவர்களின் வயது, திறன் மற்றும் கற்றற் பாணிக்கு ஏற்ப பாடங்களை எளிமைப்படுத்தி கற்பிப்பது சிறந்தது எனக் குறிப்பிட்டுள்ளார்.

### *ஆரம்பக்கல்வி ஆசிரியர்களின் கற்பித்தல் செயற்திறன் தயார்நிலை (Readiness)*

ஆரம்பக்கல்வி ஆசிரியர்களின் தயார் நிலை கற்பித்தலில் மிகுந்த செல்வாக்கை ஏற்படுத்தும் எனவும் அவர்கள் பயன்படுத்தும் கற்பித்தல் உத்திகள், வகுப்பறை முகாமைத்துவ திறன் மற்றும் மாணவர் மையப்படுத்தப்பட்ட கற்றல் முறைகள் ஆரம்பக்கல்வி ஆசிரியர்களின் கற்பித்தல் செயற்றிறனைத் தீர்மானிக்கும் முக்கிய காரணிகளாகக் கண்டறியப்பட்டன (Sinnathamby, 2016).

### *ஆசிரியர் தனியாள் காரணிகள் தொடர்பான ஆய்வுகள்*

ஆரம்பக் கல்வியில் கற்பித்தலின் தரம், ஆசிரியர்களின் சுய திறன் நம்பிக்கையால் (self-efficacy) குறிப்பிடத்தக்க வகையில் பாதிக்கப்படுகின்றது. சமூக அறிவியல் கோட்பாட்டை அடிப்படையாகக் கொண்டு, இவ்வாய்வு ஆசிரியர்களின் கற்பித்தல் சுய திறன் நம்பிக்கைக்கும் தனிப்பட்ட காரணிகள், பணிச்சூழல் மற்றும் தலைமைத்துவம் ஆகியவற்றுக்கும் இடையிலான தொடர்பை, ஆசிரியர்களின் கற்பித்தல் அனுபவம், சுய-வழிநடத்தல் கற்றலில் உள்ள நம்பிக்கை, மற்றும் சக ஆசிரியர்களின் ஆதரவு ஆகியவை அவர்களின் சுய திறன் நம்பிக்கை ஆகியவற்றுடன் நேர்மறையான தொடர்புடையவை என்பதைக் காட்டுகின்றது. பாடசாலைகளில் ஆதரவான மற்றும் ஒத்துழைப்பான பணிச்சூழலை உருவாக்குவதன் அவசியம் வலியுறுத்தப்படுகின்றது (Zhang et al., 2025).

### *வகுப்பறை முகாமைத்துவத்திறனும் கற்பித்தல் செயற்றிறனும்*

ஆசிரியர்கள் வகுப்பறை முகாமைத்துவத்தின் மூலமாக மாணவர்களின் சமூக, உணர்ச்சி மற்றும் கல்வி வளர்ச்சியை ஊக்குவிக்க முடியும். ஆசிரியர் தெளிவான எதிர்பார்ப்புகளை முன்வைத்து, மாணவர்களைச் செயலில் ஈடுபடுத்தும்போது, கற்றல் சூழல் உற்பத்தியாக மாறுகின்றது. ஆசிரியர் வகுப்பறை முகாமைத்துவ திறன் நேரடியாக மாணவர்களின் திறன்கள், அடைவு மற்றும் சாதனையைப் பாதிப்பதாகக் கண்டறியப்பட்டது (Emmer & Sabornie, 2019). ஆரம்பக் கல்வி நிலையங்களில், ஆசிரியரின் வகுப்பறை ஒழுங்கும் தன்னடக்கமும் மாணவர்களின் கற்றல் ஈடுபாட்டை அதிகரிக்கின்றன. அவ்வாறே வகுப்பறை முகாமைத்துவத்தில் ஏற்றடுத்தப்படும் மேம்பாடுகளிற்கு இணையாக கற்றல்கற்பித்தலின் செயற்றிறனிலும் அதிகரிப்பை ஏற்படுத்தும் (Arias & Morillo, 2020).

### *கற்பித்தல் செயற்றிறனை விருத்திசெய்ய மனப்பாங்கு மற்றும் உந்துதல் அவசியம் என்பது தொடர்பாக மேற்கொள்ளப்பட்டுள்ள ஆய்வுகள்*

ஆரம்பப் பாடசாலைகளில் கற்பிக்கும் ஆசிரியர்கள் சிறந்த கல்வியியலாளர்களாக (Best Educators) உருவாகுவதற்கு செல்வாக்குச் செலுத்தும் காரணிகளை ஆராய்வதை நோக்கமாகக் கொண்ட இவ்வாய்வில் அனுபவங்கள், உந்துதல், தொழில்முறை வளர்ச்சி மற்றும் சமூக-பண்பாட்டு ஆதரவு போன்றவையும் ஆசிரியர்களின் செயல்திறன், தொழில்முறை அனுபவம், உள் மற்றும் வெளி உந்துதல், பள்ளிச் சூழல் மற்றும் சமூக-பண்பாட்டு காரணிகள் ஆகியவை ஆசிரியர் மேம்பாட்டில் முக்கிய பங்கு வகிப்பதாகவும், ஆசிரியர்களின் சாதனை மற்றும் செயல்திறன், உந்துதல், சுற்றுச்சூழல், சமூக-பண்பாட்டு காரணிகள் மற்றும் தொழில்முறை அனுபவம் ஆகியவற்றுக்கு இடையே வலுவான நேர்மையான தொடர்பு இருப்பதை உறுதிப்படுத்தின. குறிப்பாக செயல்திறன், உந்துதல் மற்றும் சுற்றுச்சூழல் காரணிகள் மிகவும் உயர்ந்தளவிலான தொடர்பைக் கொண்டிருந்தன (Ximenes, 2024).

ஆரம்பக்கல்விக்கு இடைநிலை ஆசிரியர்களை நியமிப்பதால் கற்பித்தல் தரம் மற்றும் வெற்றிகரமான கற்பித்தலின் மீதான பாதிப்பு குறிப்பிடத்தக்களவு

காணப்படுகின்றது. இடைநிலை ஆசிரியர்கள் பணிநிலைத்தன்மை பற்றிய அச்சத்தால் கற்பித்தலில் உற்சாகம் இழக்கின்றனர். தகுதி பெற்ற ஆசிரியர்களின் வழிகாட்டல் இல்லாமையால் மாணவர்களின் கற்றல் முன்னேற்றம் குறைகின்றது எனக் கண்டறிந்துள்ளனர். இதனை நிவர்த்தி செய்வதற்கான பரிந்துரைகளாக ஆசிரியர்களின் தகுதிகள் மற்றும் பயிற்சித் தரத்தை தேசிய அளவில் கண்காணிக்கும் அமைப்பு உருவாக்கப்பட வேண்டும். ஆசிரியர் பயிற்சிகள் தொடர்ச்சியான கற்றலாக (Lifelong learning) மாற்றப்பட வேண்டும் என பரிந்துரைக்கப்பட்டுள்ளது (Navaratnam, 2023).


### *ஆசிரியர்களின் செயற்றிறனும் வெற்றிகரமான கற்பித்தலும் தொடர்பாக முன்வைக்கப்பட்ட ஆய்வுகள்*

ஆசிரியர் தரமான செயற்பாடுகளை உருவாக்கும் காரணிகளாக, உயர்தரத்திலான மாணவர் மையக் கற்பித்தல் (High-quality student-centered instruction), உயர்மட்ட மாணவர் ஈடுபாடு (High level of student engagement), தெளிவான மதிப்பீட்டு உத்திகள் (Clear assessment strategies) மற்றும் நேர்மறை நடத்தை முகாமைத்துவ உத்திகள் (Positive behaviour management strategies) போன்றன இனங்காணப்பட்டுள்ளது (Obidike, 2017).

இலக்கிய மீளாய்வுகளிலிருந்து ஆசியர்களின் குடிசார்காரணிகளாக பால், வயதுப்பிரிவு, பாடசாலை வகை, கல்வித்தகைமை, தொழில் தகைமை, சேவைத்தரம், கற்பித்தல் அனுபவம், முதல் நியமனப்பாடம், கற்பிக்கும் தரம் என்பனவும் ஆசிரியர் சார் காரணிகளாக அவர்களின் தனியாள்காரணிகள், தயார்நிலை, மனப்பாங்கு மற்றும் உந்துதல் திறன், படைப்பாற்றல் திறன், மற்றும் வகுப்பறை முகாமைத்துவ திறன் என்பன சாரா மாறிகளாகவும் ஆசிரியர்களின் கற்பித்தல் செயற்றிறன் சார் மாறியாகவும் கொண்டு இவ் ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**உரு 1**

*எண்ணக்கருச்சட்டகம்*




### ஆய்வு முறையியல்

யாழ்ப்பாண கல்வி வலயத்தில் நல்லூர் கோட்ட வகை II பாடசாலைகளில் ஆரம்பக்கல்வி ஆசிரியர்களின் கற்பித்தல் செயற்றிறனில் செல்வாக்குச் செலுத்தும் ஆசிரியர் சார் காரணிகளை கண்டறிவதாகும். இவ் ஆய்வு விபரண (Descriptive) மற்றும் விளக்க (Explanatory) ஆய்வு வகையைச் சேர்ந்த தனிமுறை (Mono

method) ஆய்வாகும். இந்த ஆய்விற்காக ஒதுக்கப்பட்டிருக்கும் காலப்பகுதியைக் கருத்திற்கொண்டு குறுக்குவெட்டு அளவைநிலை (Cross Sectional Survey Research) ஆய்வாக மேற்கொள்ளப்பட்டது.

**குடித்தொகையும் மாதிரியும்**

யாழ்ப்பாணக் கல்வி வலயத்தில் ஆரம்பக்கல்விப் பிரிவுகளைக் கொண்ட 87 பாடசாலைகளில் ஆய்விற்கான கால அளவு வரையறுக்கப்பட்டதாலும், வளங்கள் மற்றும் தொழில்நுட்ப வசதிகள் என்பவற்றை கருத்திற்கொண்டு பாடசாலைகளுக்கு இடையே வேறுபட்டிருந்ததாலும் கடந்த கால கல்விப் பெறுபேறுகளை அடிப்படையாகக் கொண்டு நல்லூர் கோட்டத்திலுள்ள வகை II பாடசாலைகள் 12 தேர்ந்தெடுக்கப்பட்டு, அதில் கற்பிக்கும் 65 ஆசிரியர்களும் குடித்தொகையாகக் கொள்ளப்பட்டனர். குடித்தொகை 65 ஆசிரியர்களை மட்டுமே கொண்ட சிறிய அளவினதாக இருப்பதனால் தரவுகளின் துல்லியத்தன்மையை உறுதிப்படுத்துவதற்காக, தொகைமதிப்பு மாதிரி எடுப்பு முறை (Census Sampling) பயன்படுத்தப்பட்டது. முதலாம் நிலைத்தரவு சேகரிப்பிற்காக ஆய்வாளரால் கட்டமைக்கப்பட்ட வினாக்களினைக் கொண்ட வினாக்கொத்து மூலம் தரவுகள் சேகரிக்கப்பட்டு Five point Likert’s scale மூலம் அளவிடப்பட்டது.

**தரவளிக்கையும் தரவுப்பகுப்பாய்வும்**

***குடிசார் மாறிகளின் விபரிப்பு***

இவ் ஆய்விற்காக 65 மாதிரிகளின் குடிசார் மாறிகளான பால், வயதுப்பிரிவு, பாடசாலை வகை, கல்வித்தகைமை, தொழில் தகைமை, சேவைத்தரம், கற்பித்தல் அனுபவம், முதல் நியமனப்பாடம், கற்பிக்கும் தரம் தொடர்பான தரவுகள் சேகரிக்கப்பட்டு பகுப்பாய்விற்கு உட்படுத்தப்பட்டுள்ளன.

***பால் நிலை***

ஆய்விற்கான குடிசார் மாறிகளின் பால் நிலை அடிப்படையிலான ஆய்வு மாதிரிகளின் பரம்பல் தொடர்பான விபரம் கீழே அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது.

**அட்டவணை 1**

*பால்நிலை அடிப்படையிலான ஆய்வு மாதிரிகளின் பரம்பல்*

| பால்நிலை | மீடிறன் | சதவீதம் |
|---|---|---|
| ஆண் | 7 | 10.8 |
| பெண் | 58 | 89.2 |
| மொத்தம் | 65 | 100.0 |

இவ்வாய்விற்காகத் தேர்ந்தெடுக்கப்பட்ட மொத்த மாதிரிகளிடமிருந்து பெறப்பட்ட தரவுகளின் அடிப்படையில், ஆய்வில் பங்கேற்றவர்களில் ஆண் ஆசிரியர்கள் 10.8% சதவீதமாகக் காணப்படுகின்ற அதேவேளை, பெண் ஆசிரியர்கள் 89.2% ஆகும். இதன்

மூலம், இந்த ஆய்வில் ஆண் ஆசிரியர்களிலும் பார்க்க பெண் ஆசிரியர்களே பெரும்பான்மையாக பங்கேற்றுள்ளனர்.

***கல்வித் தகைமை***

ஆய்விற்கான குடிசார் மாறிகளில் கல்வித் தகைமை தொடர்பான ஆய்வு மாதிரிகளின் பரம்பல் தொடர்பான விபரம் கீழே அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது.

**அட்டவணை 2**

*கல்வித் தகைமை அடிப்படையிலான ஆய்வு மாதிரிகளின் பரம்பல்*

| கல்வித்தகைமை | மீடிறன் | சதவீதம் |
|---|---|---|
| க.பொ.த (உ/த) | 23 | 35.4 |
| பட்டதாரி | 27 | 41.5 |
| இளமாணிப்பட்டம் | 15 | 23.1 |
| மொத்தம் | 65 | 100.0 |

அட்டவணை 2 இல் காட்டப்பட்டுள்ளவாறு கல்வித் தகைமை தொடர்பான ஆய்வு மாதிரிகளில் பட்டதாரிகள் (41.5%) அதிகமாகவும் இளமாணிப்பட்டம் பெற்றோர் குறைவாகவும் (23.1% ) காணப்படுகின்றனர். அத்துடன் குறிப்பிடத்தக்க அளவு க.பொ.த (உ/த) (35.4%) தகைமையுள்ளோர் ஆரம்பக்கல்வி ஆசிரியர்களாக உள்ளீர்ப்புச் செய்யப்பட்டுள்ளனர் என்பது வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

***தொழில் தகைமை***

ஆய்விற்கான குடிசார் மாறிகளில் தொழில் தகைமை தொடர்பான ஆய்வு மாதிரிகளின் பரம்பல் தொடர்பான விபரம் கீழே அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது.

**அட்டவணை 3**

*தொழில் தகைமை அடிப்படையிலான ஆய்வு மாதிரிகளின் பரம்பல்*

| தொழில் தகைமை | மீடிறன் | சதவீதம் |
|---|---|---|
| பயிற்றப்பட்ட ஆசிரியர் | 28 | 43.1 |
| தேசிய கற்பித்தலியல் டிப்ளோமா | 14 | 21.5 |
| பட்டதாரி | 8 | 12.3 |
| பட்டப்பின் கல்வி டிப்ளோமா | 15 | 23.1 |
| மொத்தம் | 65 | 100.0 |

அட்டவணை 3 இல் காட்டப்பட்டுள்ளவாறு, தொழில் தகைமை தொடர்பான ஆய்வு மாதிரிகளில் பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் (43.1%) தகைமை பெற்றோர் அதிகமானோரும், பட்டதாரி ஆசிரியர்கள் (12.3%) ஆகவும் கற்பித்தலில் தேசிய

டிப்ளோமா (21.5%) தகைமை பெற்றோராகவும் காணப்படுவதுடன், பட்டப்பின் கல்வி டிப்ளோமா பெற்றோர் (35.5%) ஆகவும் காணப்படுகின்றனர்.

***சேவைத்தரம்***

ஆய்விற்கான குடிசார் மாறிகளில் சேவைத்தரம் தொடர்பான ஆய்வு மாதிரிகளின் பரம்பல் தொடர்பான விபரம் கீழே அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது.

**அட்டவணை 4**

*சேவைத்தரம் அடிப்படையிலான ஆய்வு மாதிரிகளின் பரம்பல்*

| சேவைத்தரம் | மீடிறன் | சதவீதம் |
|---|---|---|
| SLTS 3-II | 1 | 1.5 |
| SLTS 2-II | 14 | 21.5 |
| SLTS 2-I | 9 | 13.8 |
| SLTS I | 41 | 63.1 |
| மொத்தம் | 65 | 100.0 |

*குறிப்பு.* SLTS - Sri Lanka Teacher Service

அட்டவணை 4 இல் காட்டப்பட்டுள்ளவாறு ஆசிரியர் சேவைத்தரம் தொடர்பான ஆய்வு மாதிரிகளில் SLTS I தரத்தையுடையோர் (63.1%) அதிகமானவர்களாகவும், SLTS 3-II தரத்தையுடையோர் (1.5%) குறைவானோராகவும் காணப்படுகின்றனர்.

***முதல் நியமனப்பாடம்***

ஆய்விற்கான குடிசார் மாறிகளில் முதல் நியமனப் பாடம் தொடர்பான ஆய்வு மாதிரிகளின் பரம்பல் தொடர்பான விபரம் கீழே அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது.

**அட்டவணை 5**

*முதல் நியமனப் பாடம் தொடர்பான ஆய்வு மாதிரிகளின் பரம்பல்*

| முதல் நியமனப் பாடம் | மீடிறன் | சதவீதம் |
|---|---|---|
| ஆரம்பக்கல்வி | 44 | 67.7 |
| இடைநிலைக்கல்வி | 21 | 32.3 |
| மொத்தம் | 65 | 100.0 |

முதல் நியமனப் பாடமாக ஆரம்பக்கல்வியைக் கொண்டமைந்தோர் (67.7%) ஆகவும் முதல் நியமனப்பாடமாக இடைநிலைக்கு நியமிக்கப்பட்டோர் (32.3%) ஆகவும் காணப்படுகின்றனர்.

***ஆசிரியர் சார்பான காரணிகளை ஆராய்தல்***

ஆசிரியர் சார் காரணிகளைக் கண்டறிவதற்கு நான்கு பரிமாணங்களையும் அடிப்படையாகக் கொண்டு சேகரிக்கப்பட்ட தரவுகள் பகுப்பாய்வு செய்யப்பட்டது.

**அட்டவணை 6**

*ஆசிரியர் சார்பான காரணிகளின் நிலை*

| ஆசிரியர் சார்பான காரணிகள் | இடை | நியம விலகல் |
|---|---|---|
| வகுப்பறை முகாமைத்துவ திறன் | 3.52 | .67 |
| மனப்பாங்கு மற்றும் உந்துதல் | 4.34 | .73 |
| படைப்பாற்றல் | 4.10 | .58 |
| ஆசிரியர்களின் தயார்நிலை | 4.46 | .80 |
| ஆசிரியர்சார்பான காரணிகள் | 4.34 | .58 |

மேலே அட்டவணையில் காட்டப்பட்டுள்ளவாறு ஆசிரியர் சார்பான காரணிகள் தொடர்பாக, வகுப்பறை முகாமைத்துவ திறன் (*M* = 3.52, *SD* = 0.670), மனப்பாங்கு மற்றும் உந்துதல் திறன் (*M* = 4.34, *SD* = 0.725), படைப்பாற்றல் திறன் (*M* = 4.10, *SD* = 0.579), ஆசிரியர்களின் தயார்நிலை (*M* = 4.46, *SD* = 0.795) என்பன உயர்வாகக் காணப்படுவதுடன் ஆசிரியர் சார்பான காரணிகளும் (*M* = 4.34, *SD* = 0.576) உயர்வாகவே காணப்படுகின்றது.

***கற்பித்தல் செயற்றிறனில் செல்வாக்குச் செலுத்தும் ஆசிரியர் சார் காரணிகளின் மதிப்பீட்டு காரணிகளிற்கு இடையிலான தொடர்பை ஆராய்தல்.***

**அட்டவணை 7**

*ஆசிரியர்சார் காரணிகளுக்கும்* கற்பித்தல் செயற்றிறனுக்*கும் இடையிலான spearman correlation பகுப்பாய்வு*

| Correlation | | | கற்பித்தல் செயற்றிறன் | தயார்நிலை | மனப்பாங்கு | படைப்பாற்றல் | வகுப்பறை முகாமைத்துவம் |
|---|---|---|---|---|---|---|---|
| Spearman's correlations | கற்பித்தல் செயற்றிறன் | Correlation Coefficient | 1.000 | .413** | .390** | .455** | .662** |
| | | Sig. (2-tailed) | | 0.001 | 0.001 | 0.000 | 0.000 |
| | தயார்நிலை | Correlation Coefficient | .413** | 1.000 | .619** | .249* | .636** |
| | | Sig. (2-tailed) | 0.001 | | 0.000 | 0.045 | 0.000 |
| | மனப்பாங்கு | Correlation Coefficient | .390** | .619** | 1.000 | .363** | .361** |
| | | Sig. (2-tailed) | 0.001 | 0.000 | | 0.003 | 0.003 |
| | படைப்பாற்றல் | Correlation Coefficient | .455** | .249* | .363** | 1.000 | .271* |
| | | Sig. (2-tailed) | 0.000 | 0.045 | 0.003 | | 0.029 |
| | வகுப்பறை முகாமைத்துவம் | Correlation Coefficient | .662** | .636** | .361** | .271* | 1.000 |
| | | Sig. (2-tailed) | 0.000 | 0.000 | 0.003 | 0.029 | |
| | | N | 65 | 65 | 65 | 65 | 65 |

*குறிப்பு.* **Correlation is significant at the 0.01 level (2-tailed), *Correlation is significant at the 0.05 level (2-tailed).

மேலே உள்ள அட்டவணைப்படி ஆரம்பக்கல்வி ஆசிரியர்களின் கற்பித்தல் செயற்றிறனில் ஆசிரியர்சார் காரணிகள் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்துகின்றன என்பது கண்டறியப்பட்டது. ஆசிரியர்களின் தயார்நிலை (Readiness) உயர்ந்த நிலையிலும் ($M$ = 4.46), இது ஆசிரியர்கள் பாடத்திட்டத் தயாரிப்பு மற்றும் கற்பித்தல் திட்டமிடலில் ஈடுபாடு காட்டுகின்றனர் என்பதை வெளிப்படுத்துகின்றது. அவ்வாறே ஊக்கமும் உயர்ந்த நிலையில் காணப்பட்டது ($M$ = 4.34). மாணவர்களுடன் அன்பாகவும் பொறுப்புணர்வுடனும் செயற்படுகின்றனர் என்பதும் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

ஆசிரியர்களின் படைப்பாற்றல் திறன் உயர்ந்த நிலையில் காணப்பட்டாலும் ($M$ = 4.10), புதிய கற்பித்தல் முறைகள் மற்றும் தொழில்நுட்பப் பயன்பாட்டில் சில குறைபாடுகள் காணப்பட்டன. வகுப்பறை முகாமைத்துவத் திறன் மற்றைய காரணிகளுடன் ஒப்பிடுகையில் குறைவாகக் காணப்பட்டது ($M$ = 3.52). மாணவர் ஒழுங்கு, நேர முகாமைத்துவம் மற்றும் கற்றல் சூழல் கட்டுப்பாடு தொடர்பில் சவால்கள் இருப்பது கண்டறியப்பட்டது.

ஆசிரியர்களின் கற்பித்தல் செயற்றிறனிற்கும், ஆசிரியர்களின் தயார்நிலை ($r$ = .413, $p$ = .001), ஆசிரியர்களின் மனப்பாங்கிற்கும் ($r$ = .390, $p$ = .001). ஆசிரியர்களின் படைப்பாற்றல் திறனுக்கும் ($r$ = .455, $p$ = .000), வகுப்பறை முகாமைத்துவத் திறனுக்கும் ($r$ = .662, $P$ < .000) இடையில் பொருண்மையான நேர்மறைத் தொடர்பு காணப்படுகின்றது. இது கற்பித்தல் வெற்றியில் வகுப்பறை முகாமைத்துவம் மிக முக்கிய காரணியாக இருப்பதை வெளிப்படுத்துகின்றது.

பயிற்சி பற்றாக்குறை, கற்பித்தல் வளங்களின் குறைவு, தொழில்நுட்ப அறிவு பற்றாக்குறை மற்றும் மாணவர்களின் தனிப்பட்ட தேவைகளைப் புரிந்துகொள்ளாத நிலை ஆகியவை கற்பித்தல் செயற்றிறனை பாதிக்கும் முக்கிய சவால்களாக அடையாளம் காணப்பட்டன. தொடர்ச்சியான தொழில்முறை பயிற்சி, ஆசிரியர் ஊக்குவிப்பு மற்றும் வகுப்பறை முகாமைத்துவ மேம்பாட்டு நடவடிக்கைகள் அவசியம் என்பதும் ஆய்வின் மூலம் வலியுறுத்தப்பட்டது.

**முடிவுகளும் கலந்துரையாடல்களும்**

நல்லூர் கோட்டத்தில் வகை II பாடசாலைகளில் கற்பிக்கும் ஆரம்பக்கல்வி ஆசிரியர்களின் கற்பித்தல் செயற்றிறனில் செல்வாக்குச் செலுத்தும் ஆசிரியர் சார்பான காரணிகள் உயர்ந்தளவிலே ($M$ = 4.34, $SD$ = 0.576) காணப்படுகின்றது என்பது வெளிப்படுத்தப்பட்டுள்ளது. இதன் பரிமாணங்களான ஆசிரியர்களின் மனப்பாங்கு ($M$ = 4.34, $SD$ = 0.725), படைப்பாற்றல் ($M$ = 4.10, $SD$ = 0.579), ஆசிரியர்களின் தயார்நிலை ($M$ = 4.46, $SD$ = 0.795) உயர்வாகவே காணப்படுவதுடன் வகுப்பறை முகாமைத்துவ திறன்கள் ($M$ = 3.52, $SD$ = 0.670) குறைவாகவே காணப்படுகின்றது.

இதற்குப் பல்வகைமையுள்ள மாணவர்களைக் கையாள்வதிலுள்ள பிரச்சினைகள், இடைநிலை ஆசிரியர்கள் ஆரம்பக்கல்வி மாணவர்களின் உளவியல் வளர்ச்சித் தன்மைகளை அறியாமை, பொருத்தமற்ற கற்பித்தல் முறைகள், குழந்தை

மைய அணுகுமுறை பற்றிய அறிவின்மை, வகுப்பறை முகாமைத்துவப் பயிற்சிக் குறைபாடு, மாணவர் தேவைக்கேற்ப கற்றற் செயல்பாடுகளைத் திட்டமிடத் தவறுதல், வகுப்பறைச் சூழலை ஒழுங்கமைத்தலில் உள்ள சிக்கல்கள், பிள்ளைகளுடனான உறவு மற்றும் உணர்வுகளைப் புரிதலில் உள்ள குறைபாடு, கற்றல் வேறுபாடுகளைக் கையாளமுடியாமை, வேலைப்பளு மற்றும் மன அழுத்தம், ஆசிரியர்களின் ஆளுமை வேறுபடுதல் போன்றன காரணமாக அமைகின்றன. இதற்கு காரணங்களாக தொழிற்பயிற்சி குறைபாடு, கற்றல் வளங்கள் பற்றாக்குறை, மாணவர்களின் தனியாள் தேவைகள் பற்றிய புரிதலின்மை, மதிப்பீட்டுத் திறன் குறைபாடு, பாடத்திட்ட புரிதல் குறைவு, தகவல் தொழிநுட்பத்திறன் குறைபாடு, ஆசிரியர்களின் சமூகமயமாக்கல் திறன் குறைவாகக் காணப்படுதல், புதுமையை விரும்பாத மற்றும் இருபத்தோராம் நூற்றாண்டின் திறனில் ஒத்துப்போகாத மனநிலையைக் கொண்ட ஆசிரியர்கள் காணப்படுதல் போன்றன அமைகின்றன.

மேலும் ஆசிரியர் சார்பான காரணிகளுள் ஆசிரியர்களின் மனப்பாங்கு தொடர்பாக, மாணவனின் கற்றல் அடைவு திருப்தியைத் தருதல் (*M* = 4.15, *SD* = 0.795), பாடநேரத்தின் பின்னரும் மாணவருக்காக மேலதிக நேரத்தை ஒதுக்குதல் (*M* = 4.14, *SD* = 0.726), மாணவர்களைக் கையாளும் போது பொறுமை மற்றும் பரிவுடன் செயற்படுதல் (*M* = 4.34, *SD* = 0.576), என்பனவற்றின் இடைப்பெறுமானம் உயர்வாகக் காணப்பட்டாலும் ஆசிரியர்களின் மனப்பாங்கு நிலையின் (*M* = 4.34, *SD* = 0.576) இடைப்பெறுமானத்திலும் குறைவாகவே காணப்படுகின்றது. இதற்கு காரணங்களாக தொழிலின் மீதான ஆர்வக் குறைவு, தன்னம்பிக்கை குறைவு, மாற்றத்தை ஏற்காத மனநிலை, மாணவர்களைப் பற்றிய எதிர்மறை பார்வை, ஊக்கமின்மை, பணிச்சுமை மற்றும் மனஅழுத்தம், தொழிற்பயிற்சி வாய்ப்பு குறைவு, தனிப்பட்ட உளவியல் காரணிகள் என்பன காணப்படுகின்றன. இக்காரணிகள் ஆசிரியர்களின் கற்பித்தல் செயல்திறனை பாதித்து மாணவர்களின் கற்றல் பெறுபேறுகளில் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன.

மேலும் வகுப்பறை முகாமைத்துவத் திறன் தொடர்பாக, வகுப்பறையில் இடையூறு விளைவிக்கும் மாணவர்களைக் கட்டுப்படுத்தல் (*M* = 3.98, *SD* = 0.754) என்பதன் இடைப் பெறுமானம் உயர்வாகக் காணப்பட்டாலும் வகுப்பறை முகாமைத்துவத் திறனின் (*M* = 4.03, *SD* = 0.602), இடைப்பெறுமானத்திலும் குறைவாகவே காணப்படுகின்றது. இதற்குக் காரணங்களாக அனுபவக் குறைபாடு, குழந்தை உளவியல் பற்றிய அறிவின்மை, வகுப்பறை ஒழுங்கமைப்பு மற்றும் நேர முகாமைத்துவத் திறன் குறைவு, மாணவர் நடத்தையை முகாமை செய்யும் திறன் குறைவு, கற்பித்தல் முறைகளின் ஒரே மாதிரித்தன்மை, மாணவர் பங்கேற்பு குறைவு, கற்றல் வளங்கள் பற்றாக்குறை ஆகியவை அடையாளப்படுத்தப்படுகின்றன.

அத்துடன் ஆசிரியர்களின் படைப்பாற்றல் திறன் தொடர்பாக , கற்பித்தலில் புதுமையைப் புகுத்துதல் (*M* = 4.02, *SD* = 0.718) தொழிநுட்பக்கருவிகளை டிஜிட்டல் உள்ளடங்கல்களாக மாற்றுதல் (*M* = 4.00, *SD* = 0.791) ஒரு துணைக்கருவியைப் பல்வேறு பாடங்களுக்கும் பயன்படுத்துதல் (*M* = 4.14, *SD* = 0.609) என்பனவற்றின் இடைப்பெறுமானம் உயர்வாகக் காணப்பட்டாலும் வகுப்பறை முகாமைத்துவத் திறனின் (*M* = 4.03, *SD* = 0.602) இடைப்பெறுமானத்திலும் குறைவாகவே காணப்படுகின்றது.

இதற்குக் காரணங்களாக நவீன கற்பித்தல் முறைகள் பற்றிய தெளிவின்மை, செயலமர்வுகள் மற்றும் தரவட்டங்களில் பங்குபற்றும் வாய்ப்புக் குறைவு, கற்றல் வளங்கள் மற்றும் வசதிகள் குறைவு, பாடத்திட்ட அழுத்தம் மற்றும் நேரக் குறைவு, மாற்றத்தை ஏற்காத மனநிலை, மாணவர் மைய அணுகுமுறை பற்றிய புரிதல் குறைவு, பரீட்சை மைய கற்பித்தல் முறை, கணிப்பீட்டில் கட்டுப்பாடுகள், நிர்வாக ஒத்துழைப்புக் குறைவு, அதிக மாணவர் எண்ணிக்கை மற்றும் ஆசிரியரின் தனிப்பட்ட படைப்பாற்றல் வளர்ச்சி குறைவு ஆகியவை காணப்படுகின்றன. இக்காரணிகள் படைப்பாற்றல் மைய கற்றல் நடைமுறையை தடுக்கும் முக்கிய காரணிகளாக அடையாளப்படுத்தப்படுகின்றன.

## முடிவுரையும் பரிந்துரைகளும்

### *முடிவுரை*

இவ்வாய்வின் முடிவாக, ஆரம்பக் கல்வி ஆசிரியர்களின் கற்பித்தல் செயற்றிறன் பல்வேறு ஆசிரியர் சார்ந்த காரணிகளால் குறிப்பிடத்தக்க அளவில் பாதிக்கப்படுகின்றது என்பது தெளிவாகிறது. குறிப்பாக ஆசிரியர்களின் தயார்நிலை, மனப்பாங்கு, வகுப்பறை முகாமைத்துவத் திறன் மற்றும் படைப்பாற்றல் ஆகியவை கற்பித்தல் திறனை மேம்படுத்துவதில் முக்கிய பங்காற்றுகின்றன. இக்காரணிகள் அனைத்தும் கற்பித்தல் செயல்திறனுடன் நேர்மறையான மற்றும் புள்ளியியல் முக்கியத்துவமுள்ள தொடர்பைக் கொண்டுள்ளன என்பது ஆய்வின் முடிவுகள் மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

மேலும், ஆசிரியர்களின் மனப்பாங்கும் தயார்நிலையும் உயர்ந்த நிலையில் காணப்பட்டாலும், வகுப்பறை முகாமைத்துவ திறன் மற்றும் படைப்பாற்றல் தொடர்பான சில குறைபாடுகள் இருப்பதும் கண்டறியப்பட்டுள்ளது. குறிப்பாக பயிற்சி குறைபாடு, வளங்களின் பற்றாக்குறை, மாணவர்களின் தனிப்பட்ட தேவைகளைப் புரிந்துகொள்ளாத நிலை, மற்றும் நவீன கற்பித்தல் முறைகள் பற்றிய அறிவின் பற்றாக்குறை போன்றவை இக்குறைபாடுகளுக்கான முக்கிய காரணங்களாக அமைந்துள்ளன. ஆய்வில் மேற்கொள்ளப்பட்ட தொடர்பியல் பகுப்பாய்வு, ஆசிரியர்களின் தயார்நிலை, மனப்பாங்கு, படைப்பாற்றல் மற்றும் வகுப்பறை முகாமைத்துவ திறன் ஆகிய அனைத்தும் கற்பித்தல் வெற்றியுடன் நேர்மறையான தொடர்பைக் கொண்டுள்ளன என்பதை வெளிப்படுத்துகிறது. குறிப்பாக வகுப்பறை முகாமைத்துவ திறன் கற்பித்தல் வெற்றியுடன் அதிகமான தொடர்பைக் காட்டியது குறிப்பிடத்தக்கது.

இதனால், ஆரம்பக் கல்வி தரத்தை மேம்படுத்த ஆசிரியர்களுக்கான தொடர்ச்சியான தொழில்முறை பயிற்சிகள், செயற்பாட்டு கற்றல் முறைகள், மற்றும் நவீன கற்பித்தல் நுட்பங்கள் ஆகியவற்றை வலுப்படுத்துவது அவசியமாகும். அதேசமயம், ஆசிரியர்களின் மனநிலை, உந்துதல் மற்றும் தொழில்முறை திருப்தியை மேம்படுத்தும் நடவடிக்கைகளும் அவசியம். முடிவாக, ஆசிரியர் சார்ந்த காரணிகளை முறையாக மேம்படுத்தினால், ஆரம்பக் கல்வி நிலைமையில் கற்பித்தல் தரம் உயர்ந்து, மாணவர்களின் கல்விசார் சாதனைகளும் குறிப்பிடத்தக்க வகையில் மேம்படும் என்பதே இவ்வாய்வின் பிரதான கருத்தாகும்.

**பரிந்துரைகள்**

ஆரம்பக்கல்விக்கு நியமிக்கப்படுகின்ற புதிய ஆசிரியர்களுக்கு ஆரம்பக்கல்வி கற்பித்தலுக்கான சிறப்பு முன்-பயிற்சி மற்றும் தொடர்ச்சியான பயிற்சித் (In-service training) திட்டங்களை நடைமுறைப்படுத்துதலும் செயற்பாட்டுக் கற்றல் (Activity-based learning), விளையாட்டு வழி கற்றல் (Play-way method) ஆகிய முறைகளில் பயிற்சி வழங்குதலை மேற்கொள்ளல். மேலும் ஆசிரியர்களின் பாட அறிவை (Subject Content Knowledge) மேம்படுத்தும் வகையில் குறிப்பிட்ட கால இடைவெளியில் பாட உள்ளடக்க அறிவு தொடர்பாக சிறிய பரீட்சைகளை நடாத்துதலும் பாடத்திட்ட இலக்குகள், கற்றல் விளைவுகள், மதிப்பீட்டு முறைகள் குறித்த தெளிவான வழிகாட்டல் மற்றும் விளக்கமளித்தல். தொடர்ந்து தகவல் தொழிநுட்ப , எண்ணிம கற்றல் வளங்கள், கல்விச் செயலிகள் போன்றவற்றைப் பயன்படுத்த ஆசிரியர்களுக்கு பயிற்சி வழங்குதலும் திறன் வகுப்பறை, நிகழ்நிலைக் கற்றல் முறைகள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்துதல் மற்றும் பயிற்சிப் பட்டறைகளை ஒழுங்குபடுத்தல்.

ஆசிரியர்கள் தமது வகுப்பறை முகாமைத்துவத்தை சுயமதிப்பீடு செய்து மேம்படுத்த ஊக்குவிக்கப்பட வேண்டும். செயல்நிலை ஆய்வு (Action Research) மேற்கொள்ளும் பண்பாடு வளர்க்கப்பட வேண்டும். அதாவது ஒவ்வொரு வருடமும் ஒவ்வொரு ஆசிரியர்கள் கட்டாயம் ஒரு செயல்நிலை ஆய்வையேனும் மேற்கொள்ள வேண்டும் என்பது அவசியமாக்கப்படவேண்டும். குறிப்பாக, பாடசாலைகளில் மாணவர்களுக்கு வழிகாட்டல் ஆலோசனைச் சேவை அலகுகள் உருவாக்கப்பட்டுள்ளமை போன்று ஆசிரியர்களுக்கும் உருவாக்கப்படவேண்டும். ஆசிரியர்கள் தமது பிரச்சினைகளைத் தயக்கமின்றி முன்வந்து கூறுவதற்கு ஏற்ற சூழல் உருவாக்கப்பட வேண்டும்.

## References

Arias, J. C., & Morillo, M. A. (2020). Classroom management skills and their direct impact on primary school student achievement: A quantitative study in Latin America. *Latin American Journal of Educational Research, 14*(2), 115–128.

Darling-Hammond, L. (2000). Teacher quality and student achievement: *A review of state policy evidence. Educational Policy Analysis Archives, 8*(1), 1–44.

Dimaculangan, N. G., San Luis, C. P., & Gabitanan, C. G. C. (2021). Teachers' self-assessment of their online teaching readiness and attitude. *International Journal of Innovative Science, Engineering & Technology, 8*(3), 320–332.

Emmer, E. T., & Sabornie, E. J. (2019). The impact of classroom management on primary education outcomes. *International Journal of Educational Research, 102*, 101–116. https://doi.org/10.1016/j.ijer.2020.101116

Hamre, B. K., & Allen, J. P. (2016). Teacher-student relationships and classroom interactions. In K. R. Wentzel & G. B. Ramani (Eds.), Handbook of social influences in school contexts: *Social-emotional, motivation, and cognitive outcomes* (pp. 21–37). Routledge.

Navaratnam, S. (2023). Classroom management competencies of primary teachers in Sri Lanka: *Challenges and prospects. Sri Lanka Journal of Educational Research, 34*(1), 55–68.

Obidike, N. D. (2017). Factors affecting teacher quality practices in primary schools in Awka Educational Zone, Anambra State. *African Journal of Teacher Education, 5*(1). https://doi.org/10.21083/ajote.v5i1.3519

Pernando, P., & Karunaratne, M. (2018). Integration of educational technology in Sri Lankan primary classrooms: Teachers' perceptions and challenges. *Journal of Educational Development in Sri Lanka, 37*(1), 45–60.

Rajendran, S. (2021). Professional development and pedagogical skills among primary school teachers in Jaffna Zone (Unpublished master's thesis). University of Jaffna, Sri Lanka.

Shulman, L. S. (1987). Knowledge and teaching: *Foundations of the new reform. Harvard Educational Review, 57*(1), 1–22.

Sinnathamby, S. (2016). Creativity and innovation in teaching: A study of primary teachers in Jaffna (Unpublished master's thesis). Eastern University, Sri Lanka.

Ximenes, S. M. (2024). Influence of factors on teachers' achievement as better educators in primary schools of Timor-Leste. *Vol. 2*(4), 1–9.

Zhang, X., Admiraal, W., & Saab, N. (2025). Factors affecting teachers' self-efficacy in teaching in primary education. *Teachers and Teaching, 31*(7), 1201–1213. https://doi.org/10.1080/13540602.2024.2389384